மாலை முரசு

பக்கங்கள் 18+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | சித்திரை 01 திங்கட்கிழமை 14.04.2025 | அதிர்வு 254

## 17ஆம் திகதி யாழ். வரும் ஜனாதிபதி

உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வடக்கு மாகாணத்தில் வெற்றிநடை போடுவதற்குத் தேசிய மக்கள் சக்தி முழு வீச்சுடன் செயற்பட்டு வருகின்றது.

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழர் நலன் விவகாரத்தை இந்தியா கைவிட்டு விட்டது

## அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு தமிழர்களை மையப்படுத்திய மூலோபாயத்தை இந்தியா கைவிட்டுள்ளது என்பதற்கான மிகப்பெரிய சமிக்ஞையாகவுள்ளது என்று இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான விஜயம் சம்பந்தமாகவும், அவருடனான தமிழ்த் தலைமைகளின் சந்திப்புத் தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் வருகைக்கும், 2025இல் நரேந்திர மோடியின் வருகைக்கும் இடையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 1987இல் இந்தியப்படைகள் நிலை கொண்டிருக்கையில், மிராஜ் விமானங்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்கையில்தான் ராஜீவ் காந்தியின் வருகை நிகழ்ந்தபோது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் அச்சமடைந்த நிலையில் இருந்தார்.

ஆனால், இந்திய எதிர்ப்புவாதக் கொள்கையில் செயற்பட்ட ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற தருணத்தில் பிரதமர் மோடியின் வருகை நிகழ்ந்திருக்கின்ற நிலையில் அது அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றிருக்கின்றது.

02



# தந்தை செலுத்திய லொறியின் சக்கரத்தில் சிக்கி குழந்தை பலி

இரத்தினபுரி – பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ருக்மல் கந்துர பிரதேசத்தில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது என்று பலாங் கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த குழந்தையின் தந்தை வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த லொறி ஒன்றை இயக்க முயன்ற போது லொறியானது பின் னோக்கிப் பயணித்துள்ளது.

இதன்போது அங்கு இருந்த குழந்தை



லொறியின் சக்கரத்தின் சிக்கி படுகாய மடைந்துள்ளநிலையில் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை தெபெலமுல்ல பகுதியைச் சேர்ந்த ஒரு வயதுடைய குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் பலாங் கொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் 39 வய துடைய குழந்தையின் தந்தை பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளைப் பலாங்கொடை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழர் நலன்...

அதேபோன்று ராஜீவ் காந்தியின் வருகையானது, அது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை மையப்படுத்தியதாக இருந்தது. குறிப் பாக, தமிழ் மக்களின் பூர்வீகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத் தியதாகவே விவகாரம் இருந்தது. ஆனால், பிரதமர் மோடியின் விஜயமா னது, ஒட்டுமொத்தமாக பொருளாதா ரத்தை மையப்படுத்தியதாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியாவின் எதிர்கால பொருளாதார மூலோபயத் திட்டங்களை மையப்படுத்தியதாகவே உள்ளது.

அதனடிப்படையில்தான் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பிலான புரிந் துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள் ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண் டும்.

அந்தவகையில் பார்க்கின்ற போது, இந்தியா தற்போது பொறுமை யிழந்துவிட்டது என்றே கொள்ளவேண்டி யுள்ளது.

ஏனென்றால், பிரதமர் மோடி தனது இலங்கை விஜயத்தின்போது எந்த வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய பிரச் சினை தொடர்பிலோ, அதிகாரப்பகிர்வு தொடர்பிலோ உத்தியோக பூர்வமாக எந்த விடயங்களையும் குறிப்பிடவில்லை.

அவர் ஆகக்குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாகக் கூட நேரடி யாகக் கூறாது, இலங்கையின் அரச மைப்பு முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்றே கூறியிருக்கின்றார். மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட் டிருக்கின்றார்.

இந்த நிலைமைக்கு முழுக்க முழுக்க காரணமாக இருப்பவர்கள் வடக்கு, கிழக்கு தமிழ்த் தலைவர்களே. ஏனென்றால் இவர்கள் 1987ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டபோது அதனை ஏற்றுக்கொண்டு மாகாண சபை முறையில் பங்கேற்கவில்லை. குறிப் பிட்ட விடுதலை இயக்கங்கள் மட்டுமே பங்கேற்றன. பிரபாகரன் தலைமை யிலான விடுதலைப்புலிகளும் பங்கேற்க வில்லை.

அதன் பின்னர் புலிகளின் தனி நாட்டுக் கொள்கையை தலைவர்கள் விரும் பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு பயணித்தார்கள். பிரபாகரனின் தீர்மா னங்களையும் செயற்பாடுகளையும் அங்கீகரித்தார்கள்.

போரின் முடிவின் பின்னர் அவர் கள் தங்களுடைய எதிர்காலச் செயற் பாடுகள் சம்பந்தமாக மீளாய்வு செய் வில்லை.

மாறாக, டில்லி வழங்கிய அறிவுரை களையும் ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளாது அவர்களுக்கு கிடைத்த அத்தனை சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தாது வரலாற்றுத் தவறிழைத்தார்கள்.

டில்லியை விடவும் புலம்பெயர் தமிழர்களையும் மேற்குலகத்தையும் அபரிதமாக நம்பிக்கொண்டு 13ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட விடயங்களை முறையாக கையாளாது அவற்றை ஒற்றையாட்சிக்குள் பெறமுடி யாதென நிராகரித்துவிட்டு, பொறுப்புக் கூறல், சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றம்,வெளிநாட்டுவிசாரணையாளர்கள் என்று நடைமுறைச்சாத்தியமற்ற விடயங் களின் மீது காலத்தினைக் கடத்தினார்கள்.

இதன் விளைவாக, தமிழ் மக்களுக் காக இலங்கை – இந்திய ஒப்பந்தத் தினை மேற்கொண்டிருந்த இந்தியாவுக் கும் தமிழ்த் தலைவர்களுக்கமான இடை வெளி அதிகரித்து விட்டது. அந்நிலைமை யானது, நான்கு தசாப்த இந்தியாவின் காத்திருப்புக்குப் பின்னர் 'பொருளா தாரத்தினை மட்டும் மையப்படுத்திய தாக' தனது மூலோபாயத்தினை மாற்றி யமைத்துள்ளது.

அதனை அநுரகுமார தலைமை யிலான அரசாங்கமும் நன்கு புரிந்து கொண்டுள்ளது. இந்த நிலைமை யானது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மிகவும் ஆபத்தானதொரு சூழலாகும். ஏனென்றால், அநுரகுமார அரசாங்கம் புதிய அரசமைப்பு உருவாக் கச் செயற்பாட்டை கையிலெடுத்தால் மாகாண சபை முறைமையை நீக்கு வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

அவ்விதமானதொரு சூழல் ஏற்பட் டால் பிரதமர் மோடியின் அடுத்த இலங்கைக்கான பயணத்தின்போது அவர் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கூடக் கோரிக்கை விடுக்காத்ச் நிலைமைகளே ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

ஆகவே, தற்போதைய சூழலை தமிழ்த் தலைவர்கள் புரிந்துகொண்டு, தமது பழைய சித்தாதந்தங்களை கைவிட்டு, நடைமுறைச் சாத்தியமான விடயங்களுக்காக டில்லியுடன் மீள் ஊடாட்டத்துக்குச் செல்ல வேண்டியது அவசியமாகின்றது." – என்றார்.

### 17ஆம் திகதி...

தேசிய மக்கள் சக்தி பிரமுகர்கள் வடக்குக்கு படையெடுத்து தீவிர பரப் புரைகளில் ஈடுபடவுள்ளனர். இதற்க மைய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபடும் நோக்கிலேயே அவரது வருகை அமையவுள்ளது.

கிட்டு பூங்காவில் மக்கள் சந்திப் பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் யாழ். வந்து பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

அத்துடன், அடுத்து வரும் நாட்க ளில் ரில்வின் சில்வா உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர்களும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள னர்.




# நல்லூரில் சிறப்பாக நடைபெற்ற விசுவாவசு வருடப் பிறப்பு உற்சவம்

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விசுவாவசு வருடப் பிறப்பு உற்சவம் மிகச் சிறப்பாக இன்று காலை இடம் பெற்றது.

புத்தாண்டு உற்சவத்தில் பெருமளவு அடியார்கள் கலந்துகொண்டு நல்லூர் கந்தனின் அருளைப் பெற்றனர்.

நாடளாவிய ரீதில் இன்று தமிழ் – சிங்களப் புத்தாண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது.




# இனந்தெரியாத நபர்கள் சிலரால் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

இனந்தெரியாத நபர்கள் சிலரால் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மொனராகலை – வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரணவராவ சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் இன்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் வெல்லவாய ரந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடையவர் ஆவார்.

முன்விரோதம் காரணமாக இனந்தெரியாத நபர்கள் சிலர் மேற்படி நபரை வெட்டிப் படுகொலை செய்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உடன்பாடு விவரம் எங்கே?

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த சமயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன.

ஆனால் அவற்றின் விவரம் - உள்ளடக்கம் - இன்னமும் வெளியாகவில்லை. இப்போதைக்கு அவை வெளியாகுமா என்ற சந்தேகம் நீடிக்கவே செய்கின்றது.

முதலில் அது ஓர் உடன்படிக்கை அல்ல என்பது சம்பந்தப்பட்ட தரப்புகளின் விளக்கம். ஆங்கிலத்தில் அதனை *Memorandum Of Understanding (MOU)* என்றே கூறுகிறார்கள். சரியாக மொழிபெயர்ப்பதானால் 'புரிந்துணர்வுக் குறிப்புரை' என்ற அளவிலேதான் அதனை கருத வேண்டும். அது இரு தரப்புகளுக்கு இடையிலான உடன்பாடோ அல்லது ஒப்பந்தமோ அல்ல. ஒரு குறிப்புரை மட்டுமே.

அது குறிப்புரையோ, உடன்பாடோ எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் இன்னொரு நாட்டுடன் தமது நாடு செய்துள்ள இந்த இணக்கப்பாடு பற்றிய விவரத்தை அறியும் உரிமை மக்களுக்கு - மக்களின் பிரதிநிதிகளுக்கு - இருக்கின்றது என்பது எதிர்க்கட்சிகளின் வாதம்.

பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு பற்றிய சர்ச்சை கிளம்பி விட்டது. அத்தகைய உடன்பாடு அல்லது இணக்கம் கைச்சாத்தாகி 48 மணித்தியாலத்துக்குள் அதன் விவரம் வெளியிடப்படும் என்று அரசாங்கத்தின் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, மோடியின் வருகைக்கு முன்னரே நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

ஆனால் மோடி வந்து திரும்பிய பின்னரும் - அந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி இவ்வளவு நாள்கள் ஆகியும் அது வெளியாகவில்லை.

அது குறித்து நாடாளுமன்றத்தில் எதிரணிகள் கேள்வி எழுப்பிய போது, அந்தக் குறிப்புரையின் விடயங்களை அறிய விரும்புபவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறிச் சமாளித்து இருந்தார். ஆனால் அந்த வகையிலும் அதன் விவரம் வெளியாகவில்லை.

இதற்கிடையில் இவ்விவகாரத்தில் எதிரணியின் நச்சரிப்புத் தாங்க முடியாத அமைச்சர், இந்தியாவுடன் உடன்பாடு செய்வதன் மூலம் நாட்டை அரசாங்கம் காட்டி கொடுத்து விட்டது என்று எதிர்த் தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர் என்ற சாரபட்ட ஒரு குற்றச்சாட்டை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அதற்கு எதிரணி உறுப்பினரான மனோ கணேசன் சரியான சாட்டையடிப் பதில் கொடுத்திருக்கிறார்.

''அமைச்சர் அவர்களே! நாங்கள் அப்படி எப்போதும் குற்றம் சாட்டவில்லை. நாங்கள் இதுபோன்ற உடன்படிக்கையை கடந்த காலங்களில் இந்தியாவோடு செய்ய முற்பட்ட போது நீங்கள்தான் எங்களைப் பார்த்து நாட்டைக் காட்டி கொடுக்கின்றார்கள் என்று குற்றம் சாட்டினீர்கள்'' என செமத்தையாகக் கொடுத்தார் மனோ கணேசன்.

அந்தப் பதிலடியை அடுத்து மேற்படி புரிந்துணர்வு குறிப்புரைகளை இன்னும் சில தினங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம் என்று அமைச்சர் விஜித ஹேரத் கூறிச் சமாளித்தார்.

ஆயினும் சில தினங்கள் கடந்து விட்டன. எனினும் இலங்கைக்கு இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் செய்து கொள்ளப்பட்ட ஏழு புரிந்துணர்வு குறிப்புரை இணக்கம் தொடர்பான ஆவணங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அவை சமர்ப்பிக்கப்படுமா என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# மறுமலர்ச்சிக்கான அரசியல் காலச்சாரத்தை நாங்கள் தற்போது உறுத்திபடுத்திருக்கிறோம்

### மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ்

(பொகவந்தலாவ எஷ்.சதீஷ்)

நாட்டில் சீர்குலைந்திருந்த அரசியல் கலாச்சாரத்தை ஒழித்துக்கட்டி மறுமலர்ச்சிக்கான அரசியல் காலச்சாரத்தை நாங்கள் தற்போது உறுத்திபடுத்திருக்கின்றோம் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கான அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தெரிவிப்பு.

நோர்வூட் பிரதேசசபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகம் செய்யும் நிகழ்வு பொகவந்தலாவ பகுதியில் இடம்பெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது அரசு ஆட்சிபீடம் ஏறி நான்கு மாதங்கள் கடந்துள்ளன. இந்த நான்கு மாத காலப் பகுதியில் நாங்கள் என்ன செய்தோம் என்று பலர் கேல்வி ஏழுப்பியுள்ளனர். இதுவரை காலமும் இலங்கையின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. வீழ்ச்சியடைந்த பொருளாதார நிலையில் கூட நாம் அனைவரும் உழைத்து இந்த நாட்டில் சேகரிக்கும் பணத்தில் பாரிய பங்கை பயன்படுத்திவர்கள் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் . ஆனால் மக்களின் பயன்பாட்டுக்கு மிஞ்சியது குறைந்தளவு பணம் மாத்திரமே.

எமது அரசில் மக்கள் பணத்தை மக்கள் மயபடுத்தி பொது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதனால்தான் நாங்கள் கூறுகிறோம் வாழ்நிலை அபிவிருத்தி என்பது வேறு ஒரு நிலை வறுமை கோட்டில் வாழுக்கின்ற மக்கள் அதிக மான மக்கள் மலையகத்தில் தான் வாழ்கிறார்கள். ஒரே வரிகளை செலுத்துக்கின்ற மக்களுக்கிடையில் உரிமைகள் போன்ற விடயங்களில் பாகுபாடு காணப்படுகிறது.

எமது அரசியல் கொள்கை என்பது, சீரான அபிவிருத்தி என்றால் அனைத்து மக்களும் சமமான உரிமைகளை பெறவேண்டும். தேசிய மக்கள் சக்தியின் முக்கிய கொள்கைகளில் ஒன்று இந்த அபிவிருத்தியை நாடு முலுவதும் விரிவாக்கப்பட வேண்டும். பொருளாதாரத்தில் உள்வாங்கவேண்டும். அப்போது தான் மக்களுடைய வாழ்வு அபிவிருத்தியடையும் என்பதுதான். இதனை நாங்கள் உறுதியாக கூறுகிறோம்.





அதனை தவிர்த்து இரண்டுகிலோ கோதுமை மா, ஐந்துகிலோ அரிசி, போன்றவைகளை பங்கிடுவதும்ஈ மதுபான போத்தலும் சோறுபார்சல்களும் வழங்குவதும் மக்களுடைய வாழ்க்கை நிலையை ஒரு போதும் அபிவிருத்திக்குக் கொண்டு செல்லாது.

இது போன்ற அற்ப சொற்ப சலுகைகளுக்கு ஏமாந்த சமுகம் தற்போதில்லை மேலும் நாங்கள் அவ்வாறு வாக்களிக்கவும் தயாராக இல்லை. தேசிய மக்கள் சக்தி அரசின் மாற்றம் அது ஜனாதிபதி தேர்தலில் இவ்வாறு மாற்றம் உறுதிப்படுத்தப்பட்டது. அதேபோல் நாடாளு மன்ற தேர்தலில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. அதேபோல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மேலும் மேலும் அது வலுபடுத்தப்படும்.

பிரதேச சபையின் ஊடாகக் கௌரவமான ஒரு மரணத்தை நல்லடக்கம் செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். நகரப் குதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் வரிப் பணம் அறிவீடுகிறார்கள். நகரப் பகுதியில் முறையான மலசல கூடங்கள் இல்லை. சிறுவர் பூங்கா இல்லை. முறையாக ஒரு வாசிசாலை கூட இல்லை.

நாட்டில் உள்ள அனைவருக்கும் அரசியல் பேசமுடியும். இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் 76 வருட காலமாக பல்வேறு துறைகளில் பல்வேறு சாதனைப்படைத்த பல அரசியல்வாதிகளிடமும் பல அரசியல் கட்சிகளிடமும் இருந்து நிறையக் கதைகள் கேட்டுள்ளோம்.

தேசிய மக்கள் சக்தி உருவாக்கியது பத்தாவது நாடாளுமன்றம். இதற்கு முன்பு ஒன்பது தடவைகள் இந்த நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு அமைச்சரவை கூட்டப்பட்டு இருக்கிறது. நூற்றுக் கணக்கண அமைச்சர் பதவிகள் வகிக்கப்பட்டுள்ளன. அதில் நுவரெலியா மாவட்டத்தில் இருந்தும் அமைசர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் பங்களித்திருக்கிறார்கள். அவர்கள் அந்த சமூக அங்கிகாரத்தைப் பெறுவதற்கு மக்கள் ஆணை வழங்கியிருந்தார்கள். அவர்களுக்காக அங்கு எவரும் குரல் எழுப்பவில்லை. உரிமைகளைக் கோரி களத்தில் இறங்கி போராடியிருக்க வேண்டும். லஞ்சம் ஊழல் மோசடி நிறைந்த அரசியல் முறைமையை நாங்கள் மாற்றியிருக்கின்றோம்.– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





## புத்தளத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

**(எஸ். சினீஸ்கான்)**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் புத்தளம் மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் புத்தளம் மாநகர சபையின் முதன்மை வேட்பாளரும், முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினருமான ரணீஸ் பதுர்தீன் தலைமையில் புத்தளத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான ஏ.என்.எம். ஜெளபர் மரைக்கார், கே.எம். ரிழ்வான், பஸீர், மு.கா புத்தளம் மாநகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## இனவாதத்தைக் கொண்டு இனியும் நாட்டில் அரசியல் செய்ய முடியாது!

### மன்னாரில் பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இனவாதத்தைக் கொண்டு இனியும் இந்த நாட்டில் அரசியல் செய்ய முடியாது. ஏனெனில் இந்த நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை கொண்டு மிகப் பெரிய ஆளணியாகத் திரண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பெருந்தோட்ட, மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் எழுத்தூர் பகுதியில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் வட்டார அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் பாரிய ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஆட்சியதிகாரம் தம்மை உயர்ந்த வர்க்கம் என்று கூறிக் கொள்பவர்களிடம்தான் இருந்தது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மூவின மக்களும் இணைந்து சாதாரண மக்களிடம் இந்த ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள்.



ஒரு விவசாயியின் மகன் இன்று நாட்டில் ஜனாதிபதியாக இருக்கின்றார்.

ரணில் விக்ரமசிங்க, ராஜபக்ஷ உட்பட தனிப்பட்ட ரீதியாக எந்த அரசியல்வாதிகள் மீதும் எங்களுக்கு கோபம் கிடையாது. அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் இந்த நாட்டின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

மக்களின் பணத்தில் தங்களுக்குச் சொத்துக்கள் குவித்தார்கள். கொலைக் கலாச்சாரத்தை உருவாக்கினார்கள். சாட்சிகளை அழித்தார்கள். ஆனால் இன்று எங்களுடைய ஆட்சியில்தான் எல்லாவிதமான குற்றச் செயல்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே மிக விரைவில் அநீதியில் ஈடுபட்டவர்கள் சிறையிலடைக்கப்படுவார்கள். தேசிய மக்கள் சக்தி மீது, மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஒருபோதும் வீணாகாது. மக்கள் எதிர்பார்த்த உண்மையான மாற்றத்தையும் ஆட்சியையும் மக்களுக்கு நிச்சயமாக வழங்குவோம்.- என்றார்.


நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் மன்னார் நகர சபை வேட்பாளர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மருதமுனை சுனாமி குடியேற்ற பிரதேச உள்ளக வீதிகள் திருத்தம்

## முன்னாள் எம்.பி. ஹரீஸின் திட்டத்தின் கீழ் புனரமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

சுனாமி பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட மருதமுனை பிரான்ஸ் சிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள உள்ளக வீதிகள் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றதாக குண்டும், குழியுமாக இருந்தன.





இதனைத் தொடர்ந்து அந்த வீதிகளைக் கொங்கிரீட் இட்டு செப்பனிட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பி-100 திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடி 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார். இதனை அடுத்து அந்தப் பிரதேச உள்ளக வீதிகள் பல கொங்கிரீட் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டன.

மருதமுனை 65 மீற்றர் சுனாமி வீட்டுத் திட்டத்தின் மேட்டுவட்டை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மையவாடி வீதி பாவனைக்குப் பொருத்தமற்றதாக மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து அவ்வீதியை சீரமைக்க முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் பி-100 திட்டத்தின் கீழ் சுமார் 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அவ்வீதியின் புனரமைப்பு பணிகளும் மக்களின் பாவனைக்கு ஏற்றாற்போல நடைபெற்றுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தனது இணைப்பாளர்கள் சகிதம் கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது அந்தப் பிரதேச மக்கள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.








# விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(சியாத்.எம்.இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவால் விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் டாக்டர் ஜலால்டீன் வித்தியாலத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜி.அர்ஷாத் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

போதை பொருள் பாவனை, சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் சிறுவர்களுக்கான ஓய்வூதிய திட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை சார் உத்தியோகத்தர்களான எம்.சனீர், எல். எல்.நஜிமுத்தீன் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர். இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# தென்மராட்சி பொது விளையாட்டு மைதானத்துக்கு விஜயம் செய்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சர்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள தென்மராட்சி பொது விளையாட்டு மைதானத்துக்கு வியாழக்கிழமை பிற்பகல் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே விஜயம் மேற்கொண்டு மைதான அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தார்.

தென்மராட்சிப் பொது விளையாட்டு மைதானம் நீண்ட காலமாக பயன்பாடற்றுக் காணப்படும் நிலையில் அது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே அமைச்சர் தனது யாழ். விஜயத்தின் போது இங்கு வருகை தந்திருந்தார்.

இதன்போது சாவகச்சேரி நகரசபைச் செயலாளர், தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதிகள் கலந்து கொண்டு பொது மைதான அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரிடம் சில வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.



இதன்போது மைதான அபிவிருத்திக்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுத்துத் தருவார் என்று அமைச்சர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார், பூநகரி பகுதிகளில் கண்டல் தாவரங்கள் மீள்நடுகை!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

உலகளாவிய சூழலியல் வசதி எனும் செயல் திட்டத்தின் கீழ், கடலோர கண்டல் தாவரங்களின் வளர்ச்சி ஊடாக சூழலை பாதுகாக்கும் முகமாக கண்டல் தாவரங்கள் நாட்டும் செயல்பாடு கிளிநொச்சி, பூநகரி மற்றும் மன்னார் கீலிக்கரையான் பிட்டி சதுப்பு நிலப் பகுதிகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜி.ஈ.எவ்., எஸ்.ஜி.பி., யு.என்.டி.பி. நிறுவனங்களின் நெறிப்படுத்தலின் கீழ் கிரேப் அமைச்சகத்தின் நிதியுதவியுடன், மன்னார், அடம்பன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் முதல் கட்டமாக கண்டல் தாவர கன்றுகள், வைபவரீதியாக நட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வில் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிர்வாக உத்தி யோகஸ்தர் டிலிஸா , கிரேப் அமைச்சகத்தின் உத்தியோகத்தர் சமூகம் சுமுகன் சர்மா தலைமையிலான குழுவினர் மற்றும் யு.என்.டி.பியின் மன்னார் மாவட்ட கள இணைப்பாளர்



திருமதி ஜெயவதனி மற்றும் அறிவு முகாமைத்துவம் பகுதி திட்ட இயக்குனர் தர்மலிங்கம் கணேஸ், உட்பட 'வி கான்' அமைப்பின் பிரதிநிதிகள் கீலியன் குடியிருப்பு மற்றும் வேட்டையான் முறிப்பு மீனவ அமைப்பு பிரதிநிதிகள், வனவள திணைகள உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்தநிகழ்வில், திருவாடுதுறை ஆதின திருமுறைச் செல்வர் ந.பரமேஸ்வரனின் பாடல்கள் இடம்பெற்றன.

ஹார்மோனியம் – இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் – ம.லேகேந்திரன், கஞ்சிரா – ஞானபோதன், கலாவித்தகர் .ப.விக்னேஸ்வரன் ஆகிய அணிசெய் கலைஞர்களுடன் சிறப்பாக இடம்பெற்றது. வெள்ளிக் கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.




குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் கல்முனையில் ஆராய்வு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 2025 ஆம் கல்வியாண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள், கல்விசார் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அடைவு மட்டத்தில் அதிகரிப்பைக் காட்டிய பாடசாலையின் அதிபர்களுக்கு நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.



இந்தக் கூட்டத்தில் கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்முனை கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை கல்வி வலயம் கடந்த ஆண்டு வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியுடன் இணைந்து நடத்திய இரத்ததானம்

(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்றின் முன்னணி உயர் கல்வி நிறுவனமான ஐ.பி.எச்.எஸ். பல்கலைக் கழகம், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் இணைந்து மாபெரும் இரத்ததான முகாமை பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் நடத்தியது.

இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எந்திரி. என்.ரீ. ஹமீட் அலி தலைமையில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நிலவி வரும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் அவசர சிகிச்சை மற்றும் மருத்துவ சேவைகள் தடையின்றி நடைபெறவும் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த இரத்ததான முகாமில் சுமார் 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள், உள்ளூர், வெளியூர் பொதுமக்கள் மற்றும் பெண்கள் என பலரும் பங்கேற்றனர்.

அத்தோடு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள் என அனைவரும் இரத்ததான செயல்முறைகளை சுகாதார விதிமுறைகளுக்கமைய நிறைவேற்றினர். முகாமின் ஒழுங்கமைப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளில் மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டனர்.

இந்தக் கல்வி நிறுவனமானது தனது கல்வி முக்கியத்துவத்தோடு சமூக பொறுப்பையும் உணர்ந்து

தொடர்ச்சி▼

# அக்கரைப்பற்று...

**தொடர்ச்சி▲**

மிகச்சிறப்பான முறையில் இந்த இரத்ததான முகாமை நடத்தியது. இந்த நிறுவனத்தின் இந்த மாபெரும் பணி ஈருலகிலும் நன்மைகளை ஈட்டுத்தரக் கூடிய பெரும் நன்மையான காரியம் என்பதுடன் இம் முயற்சி கல்வி நிறுவனங்களும் சமூக நலனில் முக்கிய பங்காற்காற்றலாம் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக காணப்படுகிறது.

இவ்வாறான சமூக நல்லிணக்கத் திட்டங்கள் மற்றும் செயல்கள் கல்வி திட்டத்தினை தாண்டி மென்மேலும் இச் சமூகத்திற்கு வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதுடன் இந்நிகழ்வினை சிறப்பாக நடத்தி முடிக்க உதவி செய்த சகல தரப்பினருக்கும் நிறுவனத்தின் பணிப்பாளர் இதன் போது நன்றி தெரிவித்தார்.








# புத்தளத்தில் கல்வியியல் சமூகத்தை சந்தித்தார் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.!

புத்தளத்துக்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், புத்தளம் நகர அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வியியல் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான ஜெளபர் மரைக்கார், ரிழ்வான் மரைக்கார், மாநகர சபை தலைமை வேட்பாளர் ரணீஸ் பதுர்தீன், மாவட்ட இளைஞர் அமைப்பாளர் நஸ்ஹத் மரைக்கார் உட்பட முன்னாள் நகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் கூட்டம் மாளிகைக்காட்டில்

(மாளிகைக்காடு)

காரைதீவு பிரதேச சபைத் தேர்தல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாளிகைக்காடு பிரதேச அமைப்பாளரும், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான எம்.எச்.எம். இஸ்மாயில் தலைமையில் நேற்று முன்தினம் (12) மாளிகைக்காட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், காரைதீவு பிரதேச சபையின் மரச்சின்ன வேட்பாளர்களான எம்.எச்.எம். நாசர், எப்.எம்.றெளபி, பட்டியல் வேட்பாளர்கள் மற்றும் மாளிகைக்காடு பிரதேச ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.








அமிர்தசர் நகரில் ஜாலியன்வாலா பாக் படுகொலை நினைவுச் சின்னம்

# ஜலியன் வாலாபாக் - பிரிட்டிஷின் கோர முகம்: ஆங்கிலேய காலனியாதிக்க கறைபடிந்த வரலாறு!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(இந்தியாவில் நிகழ்ந்த ஜலியன் வாலா பாக் படு கொலைகளின் 106 ஆவது நினைவு தினம் நேற்று ஆகும். 13.04.1919 அன்று பிரித்தானிய ராணுவத்தால் ஜாலியன் வாலாபாக்கில் 379 அப்பாவி இந்திய மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.)

இந்திய விடுதலை போரில் ஜலியன் வாலாபாக் படு கொலை பற்றியும், ஆங்கிலேய காலனியாதிக்க கறைபடிந்த வரலாறாகும்.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மட்டுமல்ல, ஆங்கிலேய காலனியாதிக்க வரலாற்றிலும் அழிக்க முடியாத கறை ஜலியான் வாலா பாக் ( Jallian wala Bagh massacre ) படுகொலை என்றே வரலாற்று ஆய் வாளர் கூறுவர்.

### சத்தியாக்கிரக இயக்கம்

அன்றைய காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இந்தியர்களின் சத்தியாக்கிரக இயக்கத்தை பிரட்டிஷ் பேரரசுக்கு வந்துள்ள பேராபத்து எனக் கருதினார்கள். அத்துடன் மக்களிடையே பரவி வளர்ந்து வரும் போராட்ட உந்துதலையும் எழுச்சியையும் ஆரம்பத்திலேயே நசுக்கிவிட ஆட்சியாளர் முடிவு எடுத்தனர்.

இதற்காக சிட்னி ரௌலட் என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, ரௌலட் சட்டம் (Rowlatt Act ) நடைமுறைப் படுத்தப்பட்டது. சுதந்திர ஊடகங்களைக் கட்டுப்படுத்தவும், ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்து விசாரணையின்றி சிறைகளில் அடைத்து வைக்கவும், அனுமதியின்றி சிறையிலிடவும் பொலிஸாருக்கு இந்தச் சட்டம் வழிவகுத்தது.

இந்திய மக்களிடையே எழுச்சியும் எதிர்ப்பும் வேகமாயின. பல்வேறு ஊர்வலங்கள் கண்டன எதிர்ப்புக் கூட்டங்கள், ரௌலட் சட்டத்துக்கு எதிரான எதிர்ப்புகள் என பரவலாக வளர்ந்தன. இந்தப் போராட்டத்தின் உச்சக்கட்டம்தான் ஏப்ரல் 13 ஜலியன் வாலா பாக் படு கொலை நிகழ்வாகியது.

பஞ்சாபில் ஜலியன் வாலா பாக் பூங்கா நான்கு பக்கமும் மதிற் சுவர்களால் சூழப்பட்டு உள்ளே செல்ல ஒரே ஒரு பாதை மட்டுமே உள்ள ஒரு மைதானம். இந்த இடத்தில்தான் ரௌலட் சட்டத்தை எதிர்க்கும் போராட்ட விளக்க கூட்டம் 1919 ஏப்ரல் 13 ஆம் நாள் நடத்தப்பட்டது. பல ஆயிரக் கணக்கான மக்கள் தலைவர்களின் பேச்சைக் கேட்க மைதானத்தில் கூடியிருந்தனர். அப்போது அந்த இடம் ஆங்கிலப் படையால் சுற்றிவளைக்கப்பட்டது.


பிரித்தானிய ஜெனரல் டயர் (General R. E. h Dyer) சுட உத்தரவிட்டவுடன் ஆயிரக் கணக்கான மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதால் மக்கள் பீதி அடைந்தனர். தப்பி ஓட வழியின்றித் தவித்தனர். அங்கிருந்த ஒரு கிணற்றில் குதித்தனர். துப்பாக்கிச் சூட்டில் இறந்த வர்களைவிட மிதி பட்டும் கிணற்றில் குதித்தும் இறந்தவர்கள் அதிகம் இருப்பார்கள். 90 துப்பாக்கிகளால் 10 நிமிடத்தில் 1,650 ரவைகள் சுடப்பட்டதாக கூறப்படுகிறது. இறந்த வர்களின் முழுக் கணக்கு அப்போது மறைக்கப்பட்டது.


பகத்சிங் கண்முன்னே இந்தப் படுகொலை நிகழ்கையில் அங்கே ஒரு 11 வயது சிறுவன், அந்த கோரக்காட்சியைக் கண்டு மனம் கொதித்தான். அங்கிருந்த ரத்த மண்ணைக் கையால் அள்ளினான் சபதம் ஏற்றான், 'ஆங்கிலேயர்களை பழிவாங்காமல் விட மாட்டேன்' என்றார். அவன் தான் பெயர் பகத்சிங்.

இந்தச் சபத்தை நிறைவேற்ற அவருடன் தோளோடு

தொடர்ச்சி▼







Mural depicting 1919 Amritsar massacre

# ஜலியன் வாலாபாக் - பிரிட்டிஷின் கோர முகம்: ஆங்கிலேய காலனியாதிக்க கறைபடிந்த வரலாறு!

தொடர்ச்சி▲

தோள் கொடுத்து செயற்பட்ட இளைஞர்கள் தான் ராஜகுரு, சுகதேவ். அவர்களின் போராட்டத்தையும், தியாகத்தையும் உலகே அறியும்.

**ஆயிரக்கணக்கான மக்கள் சுட்டுக் கொலை**

இன்றைக்கும் ஜலியன் வாலா பாக் சென்றாலும், ஆங்கிலேய ராணுவ வீரர்கள் சுட்ட குண்டுகள் பாய்ந்து பெயர்ந்த செங்கல் தடங்கள் இருப்பதைப் பார்க்கலாம். ஆனால், ஜலியான்வாலா பாக் துயரத்தை முழுமையாக இந்திய மக்கள் உணர்ந்திருப்பார்களா என்பதும் ஐயமே. ரெஜினால்ட் டையர் என்ற இராணுவ அதிகாரியின் தலைமையில் பிரித்தானிய இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட கொடூர நிகழ்வால் பெண்கள், சிறுவர்கள் நூற்றுக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். அங்கே உயிர் துறந்தவர்களின் கனவு அடுத்துவந்த தலைமுறைகளில் நிறைவேற்றப் பட்டிருக்குமா என்பதும் கேள்விக் குறியே.

ஜலியன் வாலா பாக் படுகொலையில் கொல்லப்பட்டவர்கள் திட்டவட்டமாக எத்தனை பேர் என்று இதுவரை தெரியாது. அந்த எண்ணிக்கையோ, பெயர்களோ முறைப்படி இதுவரை ஆவணப்படுத்தப்படவில்லை.

நீண்ட காலமாகியும் அடுத்ததாக ஜலியன் வாலா பாக்கில் பலியானவர்களின் வாரிசுகள், தங்கள் முன்னோர்களைப் பற்றி என்னவாகத் தங்கள் மனத்தில் வடித்துக் கொண்டிருப்பார்கள் என்பதும் தெரியாது. அந்தப் படுகொலை நிகழ்விலிருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட துயரமான வரலாறு இன்னமும் அந்த மண்ணில் உள்ளது.

**பிரித்தானிய பிரதமரின் நினைவு கூறல்**

பிரித்தானிய காலனித்துவ வரலாற்றில் பெரும் இரத்தக் களரியை உண்டு பண்ணிய படுகொலைகளில் ஒன்றாகக் கருதப்படும் ஜலியன் வாலா பாக் படுகொலையை, 2013 இல் அன்றைய பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் நினைவு கூர்ந்தார்.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பெப்ரவரி 20, 2013 இல் இந்தியா வந்திருந்த அவர் தனது பயணத்தின் போது பஞ்சாபின் அம்ரித்சர் நகருக்கு வந்திருந்தார். அங்கே அம்ரித்சர் நகரில் ஜலியன் வாலா பாக் படுகொலை நினைவு இடத்தில் அஞ்சலி செய்து நினைவு கூர்ந்தார்.

முன்னரும் பல பிரித்தானிய பிரதமர்கள் தமது கவலைகளை இப் படுகொலைகளுக்கு வெளியிட்டிருந்தாலும், பணியில் இருந்த ஒரு பிரதமர் ஒருவர் நேரில் ஜாலியன்வாலா பாக் நினைவாலயத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தியது பலரின் கவனத்தை ஈர்த்தது. ஆனாலும் அதற்காக அவர் முறையான மன்னிப்பு எதனையும் கேட்கவில்லை.

“பிரித்தானிய வரலாற்றில் இது ஒரு கறை படிந்த நிகழ்வு” என டேவிட் கமரன் கூறினார். இங்கு நடந்தவைகளை நாம் என்றுமே மறக்கக் கூடாது எனத் தனது அஞ்சலிக் குறிப்பில் அவர் எழுதினார்.

சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பிரித்தானியப் படையினர் சரமாரியாகச் சுட்டதில் பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் கொடூரமான ஜலியன் வாலா பாக் படுகொலைகள் எனக் கூறப்படும்.

இந்தப் படுகொலைகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 379 என்று அன்றைய பிரித்தானிய அரசு கூறியிருந்தது. ஆனாலும் இந்தத் தொகை 1,000 இற்கும் அதிகம் என்று இந்தியத் தரப்பில் கூறப்படுகிறது. வரலாற்றின் கறைபடிந்த துயரமான நிகழ்வுக்கு இதுவரை யாரும் தண்டிக்கப்படவும் இல்லை, அத்துடன் பொறுப்புக் கூறவும் இல்லை.



# வக்பு சட்ட திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் விஜய் வழக்கு

வக்பு சட்டத் திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் த.வெ.க. தலைவர் விஜய் வழக்கு தொடர்ந்துள்ளார்.

வக்பு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் மசோதா மற்றும் முஸல்மான் வக்பு (ரத்து) மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இண்டியா கூட்டணியின் கடும் எதிர்ப்புக்கு இடையே நிறைவேறியது. இதைத் தொடர்ந்து மசோதாவுக்கு குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்த நிலையில், சட்டத் திருத்தம் அமுலுக்கு வந்தது.

இதற்கிடையே, தமிழக சட்டப்பேரவையில் மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, தி.மு.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. இதேபோல், பல்வேறு கட்சிகளும் உச்ச நீதிமன்றத்தில் மசோதாவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளன.

அந்த வகையில் த.வெ.க. தலைவர் விஜய்யும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். முன்னதாக மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி த.வெ.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், மசோதா நிறைவேற்றத்துக்கு கண்டனம் தெரிவித்து மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் நடத்தப்பட்டது.



இது தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்ட அறிக்கையில், “முஸ்லிம் சகோதரர்களோடு இணைந்து வக்பு உரிமமை சட்டப் போராட்டத்தில் த.வெ.கவும் பங்கேற்கும்” என தெரிவித்திருந்தார். அந்த வகையில் உச்ச நீதிமன்றத்தில் விஜய் தாக்கல் செய்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# விடுதலை சிறுத்தைக்கு ஆசை காட்டி தி.மு.கவை உடைக்க சதி செய்தனர்

## திருமாவளவன் குற்றச்சாட்டு

விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஆசை காட்டி தி.மு.கவை உடைக்க சதி செய்தனர் என்று திருமாவளவன் குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பெரியார், அம்பேத்கர் சிலை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. திக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஆகியோர் சிலைகளைத் திறந்துவைத்தனர். இதில், அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், எம்எல்ஏ சாக்கோட்டை க.அன்பழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் திருமாவளவன் உரையாற்றுகையில்,

“தி.மு.க. அரசியல் இயக்கமாகவும், ஆளும் கட்சியாகவும் வீரநடை போடுகிறது. எனவே, இன்னொரு கட்சி தி.மு.கவுக்கு முட்டுக்கொடுக்க வேண்டிட அவசியமில்லை. தி.மு.க. பலவீனமாகவும் இல்லை. தி.மு.கவை வீழ்த்துவோம் என்றால், வி.சி.கவையும் வீழ்த்துவோம் என்று பொருள். எனவே, எங்கள் அரசியல் கோட்பாட்டை எதிர்ப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

கூடுதலாக தொகுதி, ஆட்சியில் பங்கு தருகிறோம், தி.மு.க. அணியை விட்டு வெளியே வாருங்கள் என்று ஆசை காட்டி, தி.மு.க. கூட்டணியை உடைக்கப் பார்த்தார்கள். இதுபோன்ற அரசியல் நகர்வுகளுக்கு என்றும் நாங்கள் இடமளித்தது கிடையாது. என்னை துருப்புச்சீட்டாக வைத்து, தி.மு.க. கூட்டணியை உடைத்துவிடலாம் என்ற அவர்களது முயற்சி தோற்றுப்போனது.

அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணியை பழனிசாமிதான் அறிவித்து இருக்க வேண்டும். ஆனால், அமித்ஷா அறிவித்துள்ளார். இந்நிலையில், பழனிசாமி சுதந்திரமாக முடிவெடுக்கிறார் என்பதை எப்படி நம்ப முடியும். அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து வெற்றிபெற்று, அதிக வாக்குகளை பெற்றதாக தங்களை முன்னிறுத்த பா.ஜ.க. முயற்சிக்கிறது. மேலும், அ.தி.மு.கவை வீழ்த்தி, கரைந்து போகச் செய்யும் யுக்தியையும் பா.ஜ.க. கையாள்கிறது.” என்றார்.



# பா.ஜ.க - அ.தி.மு.க. கூட்டணி அறிவிப்பு வாக்காளர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

## ஜி.கே வாசன் தெரிவிப்பு

பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி அறிவிப்பு, தமிழக வாக்காளர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கவரப்பட்டி கிராமத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் நிர்வாகி இல்ல விழா வில் பங்கேற்க சென்ற ஜி.கே. வாசன், பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தி.மு.க. அரசை அகற்ற உறுதியான கூட்டணி தேவை என்ற நிலையில், மத்தியில் பா.ஜ.க. மாநிலத்தில் அ.தி.மு.க. என்ற கூட்டணி அறிவிப்பு தமிழக வாக்காளர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக உள்ளது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துள்ளது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத அரசாக தி.மு.க. உள்ளது. மாற்றம் உறுதி என்று மக்கள் தீர்மானித்து இருக்கிறார்கள் அதற்கு அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி நம்பிக்கைக்கு உரிய கூட்டணியாக வரும் நாள்களில் வலம் வரும்.

மக்களின் வரிப்பணத்தை டாஸ்மாக் மூலம் தவறாக கையாண்டு டாஸ்மாக் ஊழல் நடந்தது வெட்ட வெளிச்சமாகி விசாரணை நடந்து வருகிறது.

பொறுப்பற்ற முறையில் அமைச்சர் பேசுவதும் அதை ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்ப்பதும் வெட்கக்கேடு. ஆபாச வார்த்தைகளை, காதில் கேட்க முடியாத வார்த்தைகளை பேசியவர் கட்சி பொறுப்பில் இருந்து மட்டும் நீக்கம் செய்யப்பட்டு அமைச்சராக நீடிப்பார் என்றால் இதுதான் திராவிட அரசின் மொடலா என கேட்க விரும்புகிறோம். உடனடியாக அமைச்சர் பொறுப்பில் இருந்து அவரை நீக்க வேண்டும்.

சட்டமன்றத் தேர்தலுக்காக த.மா.கவை பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். தொய்வுள்ள இடத்தை அடையாளம் கண்டு அந்த இடங்களில் வலுப்படுத்தி கூட்டணிக்கு முக்கிய கட்சியாக செயல்பட உறுதி கொண்டு அடுத்த 6 மாதங்களுக்குச் செயல்பட இருக்கிறோம்." என்றார்.

# 2026 இல் தே.ஜ.கூட்டணி ஆட்சியை இலக்காக கொண்டு செயல்படுவோம்

## அண்ணாமலை அழைப்பு

தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டில் தி.மு.கவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு,. தே.ஜ.கூட்டணி ஆட்சி அமைப்பதை இலக்காக கொண்டு செயல்படுவோம் என்று பா.ஜ.க வினருக்கு அக்கட்சியின் தேசிய பொதுக்குழு உறுப்பினர் அண்ணாமலை அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை வானகரத்தில் நடைபெற்ற பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பொறுப்பேற்பு விழாவில், கட்சியின் முன்னாள் மாநில தலைவரும், பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினருமான அண்ணாமலை உரையாற்றுகையில்,

"நாட்டின் இறையாண்மைக்கு சோதனை வந்தபோதெல்லாம், அதை காப்பாற்றவும், குடும்ப ஆட்சியை தவிர்த்து நேர்மையானவர்களை மன்றத்துக்குள் அனுப்புவதற்கும், ஒரு நல்லாட்சியை அளிக்கவும் எப்போதும் பாடுபட்ட கட்சி பா.ஜ.க. சாதாரண தொண்டர்களை தலைவர்களாக்கி அழகு பார்த்து, அதன்மூலமாக வளர்ந்த கட்சி. வரும் 2026இல் தி.மு.கவை துடைத்தெறிந்து, வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற இலக்கை நோக்கி செல்ல வேண்டும். வேகத்தை குறைத்து, சரியான திசையில் செல்ல வேண்டும்.

அதன்படி, 2026 இல் தேசிய ஜனநாயக கூட்டணி அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் சட்டப்பேரவை தேர்தலை சந்திக்க உள்ளது. உங்களை வழிநடத்தியதை எனக்கு கிடைத்த பாக்கியமாக கருதுகிறேன். வாழ்க்கையில் எத்தனையோ விடயங்கள் நாம் செய்தாலும், பா.ஜ.கவின் தொண்டன் என்பது உச்ச கட்ட பொறுப்பு என்பதை எப்போதும் சொல்வேன். அற்புதமான மனிதர்கள் இருக்கும் கட்சி இது. இன்று நாம் எல்லாரும் ஒன்றாக இணைந்து, ஒருமனதாக நயினார் நாகேந்திரனுக்கு பின்னால் அணிவகுத்து படையாக நின்று, 2026 இல் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்க பாடுபடுவோம். இதையே நமது இலக்காக கொண்டு செயல்படுவோம்." என்றார்.





# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்: 21 பேர் பலி, 80 இற்கு மேற்பட்டோர் காயம்

வடக்கு உக்ரைன் நகரமான சுமியின் மீது நேற்று ஞாயிற்றுக் கிழமை ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளனர், 80 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று உக்ரைன் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் உக்ரைன் மீது நடத்தப்பட்ட மோசமான இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ரஷ்யாவுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் எதிர்வினையைக் கோரியுள்ளார்.

தரையில் கிடக்கும் சடலங்கள், அழிக்கப்பட்ட பஸ், வீதிகளின் மத்தியில் எரிந்து கிடக்கும் வானங்கள் என மனதை உலுக்கும் காட்சிகளை காட்டும் காணொலியை வெளியிட்டு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள உக்ரைன் ஜனாதிபதி, “அப்பாவி மக்களின் உயிரைப் பறிப்பது, அயோக்கியர்களால் மட்டுமே இவ்வாறு செயல்பட முடியும். இது கர்த்தர் ஜெருசலத்துக்குள் நுழைந்ததைக் கொண்டாடும் குருத்தோலை ஞாயிறு அன்று மக்கள் தேவாலையம் செல்லும் நாளில் நடந்துள்ளது.

ரஷ்யா, இந்த மாதிரியான தீவிரவாதத்தையே விரும்புகிறது மற்றும் போரை நீட்டிக்க விரும்புகிறது. ஆக்கிரமிப்பாளர் மீது அழுத்தம் கொடுக்காமல் அமைதி சாத்தியமாகாது. பேச்சுவார்த்தைகள் பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் வான்வழித்தாக்குதல்களை தடுத்து நிறுத்தவில்லை” என்று தெரிவித்துள்ளார்.

உக்ரைன் உள்துறை அமைச்சர் கூறுகையில், “தாக்குதல் நடந்த போது, மக்கள் தெருக்களில் வாகனங்களில், கட்டடங்களினுள் இருந்தனர். ஒரு முக்கியமான தேவாலயத் திரு நாளில் அப்பாவிகள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது” என்று கூறியுள்ளார்.

உக்ரைனில் தவறான தகவல்களை எதிர்ப்பதற்கான மையத்தின் பாதுகாப்பு அதிகாரியான ஆண்ட்ரி கோவலென்கோ, “அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்கா஼ப் ரஷ்யா சென்று வந்தப் பின்பு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குடிமக்கள் மீதான தாக்குதல்களைச் சுற்றி ரஷ்யா இந்த இராஜதந்திரம் என்று அழைக்கப்படும் விஷயங்களை கட்டமைக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கான அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்கா஼ப், உக்ரைன் அமைதி ஒப்பந்தத்துக்காக புனித பீட்டர்ஸ்பர்க்கில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுடன் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனிடையே, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம், தங்கள் நாட்டின் அணு சக்தி உள்கட்டமைப்பு மீது வெள்ளிக் கிழமை ஐந்து ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது என்று தெரிவித்திருந்தது. அமெரிக்காவின் மத்தியஸ்த முயற்சியில் இத்தகைய தாக்குதல்களை நடத்தக்கூடாது என்ற ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்று ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த மாதத்தில் ரஷ்யாவும் உக்ரைனும் பிறநாட்டின் அணு சக்தி உள்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என்று ஒப்புக்கொண்டன. ஆனாலும் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக இரு தரப்பும் தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வருகின்றன.






# உக்ரைனில் அமைதியை எட்ட முடியாத நிலை; ஐரோப்பியப் பாதுகாப்பு அமைச்சர்கள் தகவல்

ரஷ்யாவின் தொடர்ச்சியான தாக்குதல்கள் காரணமாக உக்ரைனில் அமைதியை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பியப் பாதுகாப்பு அமைச்சர்கள் தெரிவித்துள் ளனர்.

உக்ரைனின் போர் நிறுத்தம் குறித்து அமெரிக்கா மற்றும் மொஸ் கோவுடனான பேச்சுவார்த்தையை அடுத்து அவர்கள் இதனைக் குறிப்பிட் டுள்ளனர்.

இதனிடையே, உக்ரைன் குறித்து ரஷ்ய ஜனாதிபதி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான அமெரிக்கா வின் விசேடத் தூதுவர் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது.

உக்ரைனின் போர் நிறுத்தம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்த கலந்துரையாடல் முன்னெடுக் கப்பட உள்ளதாகச் சர்வதேச ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# உலகின் உயரமான பாலம் ஜூனில் மக்கள் பாவனைக்கு

உலகின் உயரமான பாலம் எதிர்வரும் ஜூன் மாதம் மக்கள் பாவனைக்கு திறக்கப்பட வுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த பாலம் சீனாவில் அமைக்கப்பட் டுள்ளது.

சீனாவின் பெய்பென் ஆற்றின் மேலாக 2,051 அடி உயரத்தில் இந்த பாலம் அமைக்கப் பட்டுள்ளது.

சீனாவின் கிராமப்புறப் பகுதியில் முக்கியமான போக்குவரத்து இணைப்புகளை வழங்கும் நோக்கில் இந்தப் பாலம் அமைக்கப் பட்டுள்ளதாக சீனத் தரப்பில் கூறப்படுகிறது.

இந்தப் புதிய பாலம் ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.





கனடா முரசு
திங்கட்கிழமை 14/04/2025

**கனடாவில் இரத்த அழுத்த மருந்துகளுக்கு தட்டுப்பாடு**

கனடாவில் இரத்த அழுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கனடாவின்

03



# கனடா குடியுரிமை பெறுவதில் அமெரிக்கர்கள் அதிக ஆர்வம்

**அமெரிக்காவில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள் மற்றும் சமூக உரிமை குறித்த அச்சம் காரணமாக, கனடாவுடன் குடும்ப தொடர்புகள் கொண்ட அமெரிக்கர்கள் மத்தியில் கனடா குடியுரிமையை மீண்டும் பெறும் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது என குடிவரவு சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.அதிகரிக்கும் இந்த விண்ணப்பதாரர்களில், மாற்றுப் பாலின சமூகத்தைச் சேர்ந்த பலரும் இடம்பெயர்வு முயற்சியில் ஈடுபடுகின்றனர்.**

இவர்களும், அமெரிக்காவில் உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் குறைந்து வருவதில் கடும் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

“அமெரிக்க அரசின் தற்போதைய போக்கில் மக்கள் பலர் தங்களை பாதுகாப்பற்ற நிலையில் உணர்கிறார்கள்,” என குடிவரவு சட்டத்தரணி சான்டல் டெஸ்லோஜ்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் அதிகாரங்கள் மீண்டும் வலுப்பெறும் சூழல், குறிப்பாக சமூகத்தில் சில பகுதியில் கட்டுப்பாடுகள் கடுமையாக விதிக்கப்படும் நிலை மக்கள் மனதில் அச்சத்தை உருவாக்கியுள்ளது என தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேலும் பல குடும்பங்கள் குழந்தைகளின் பாதுகாப்பை முன்னிறுத்தி கனடாவுக்கு இடம்பெயர விரும்புகின்றனர் என மற்றொரு குடிவரவு சட்டத்தரணி மேக்ஸ் சௌதரி கூறியுள்ளார்.




# எட்மண்டனில் ஆண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழப்பு

எட்மண்டன் நகரில் உள்ள மேற்கு பகுதியிலுள்ள ஒரு வீட்டில், 35 வயது ஆணான ஜான் மோனாரெஸ் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

162 ஆவது தெருவும், 96ஆவது அவென்யுவும் அருகிலுள்ள வீடொன்றில், அதிகாலை 1 மணியளவில் அவசர மருத்துவ சேவைகள் அளித்த அழைப்பிற்கேற்ப பொலிஸார் அந்த இடத்திற்கு விரைந்து, மோனாரெஸின் சடலத்தை மீட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

அவரது மரணம் சந்தேகத்துக்கிடமானது எனக் கருதப்படுவதால், தற்போது கொலை விசாரணை துறையின் அதிகாரிகள் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மரணத்துக்கான காரணம் மற்றும் மரணமான முறை குறித்த விசாரணை இன்னும் தொடர்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜான் மோனாரெஸின் மரணத்துடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளவர்கள், எட்மண்டன் பொலிஸாரை 780-423-4567 என்ற எண்ணில் அல்லது அலைபேசியில் இருந்து #377 என்ற குறியீட்டை அழைப்பதன் மூலம் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பெண்ணின் தலையில் கத்தியால் குத்திய நபரை தேடும் டொராண்டோ பொலிஸ்

டொராண்டோவின் செயின்ட் லாரன்ஸ் வீதி மற்றும் ரிச்ச்மண்ட் வீதி கிழக்குப் பகுதியில், ஒரு பெண் தலையில் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில், பொலிஸ் அவசர அழைப்புக்குப் பதிலளித்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்துள்ளனர்.

அந்தப் பெண் பலத்த காயங்களுடன் இருந்தாலும், உயிருக்கு ஆபத்தில்லை என மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர், சுமார் 30 வயதுள்ள பெண் என பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றம் சமத்தப்பட்ட நபர் கறுப்பு தொப்பி, கருப்பு ஜாக்கெட் அணிந்திருந்தார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தகவல்கள் தெரிந்தவர்கள், டொராண்டோ பொலிஸின் 51 ஆவது பிரிவு விசாரணை அதிகாரிகளை 416-808-5100 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.




# அமெரிக்கா என்ற பெயரிலிருந்த வீதியின் பெயர் மாற்றப்பட்டது

கனடாவில் அமெரிக்கா அவன்யூ என்ற பெயரிலிருந்த வீதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மேற்கொண்ட வரி நடவடிக்கைகள், கனடாவுக்கு எதிரான போக்கை எடுத்துள்ளதோடு, அது முழு நாட்டிலும் தேசியவாத கொள்கைகளை வலுப்பெறச் செய்துள்ளது.

இந்த சூழ்நிலையில், வான் நகரம் ஒரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அந்த நகரின் 'அமெரிக்கா அவன்யூ' என்ற வீதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வான் நகர மேயர் ஸ்டீவன் டெல் டூகா, பெப்ரவரி 25 ஆம் திகதி நடைபெற்ற நகர மன்ற கூட்டத்தில், இந்த வீதியின் பெயரை 'Terry Fox Avenue' என மாற்றும் தீர்மானத்தை முன் வைத்துள்ளார்.

நம்மை பிரதிபலிக்கும் ஒரு கனடிய வீரரின் பெயரை இந்த வீதிக்கு வழங்க வேண்டும் என கருதினோம் என்று மேயர் டெல் டூகா கூறியுள்ளார்.

;அமெரிக்கா அவன்யூ; என்பது Jane Street மற்றும் John Deisman Boulevard இடையில் அமைந்துள்ள ஒரு முக்கிய வீதியாகும்.

டெரி ஃபாக்ஸ், ஓர் அறியப்படும் கனடிய பிரபலமாவார், இவர் புற்றுநோய் ஆராய்ச்சிக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டெரி ஃபாக்ஸ், கனடாவின் பெருமைமிக்க தேசிய பிரபலங்களில் ஒருவர். அவரது தைரியம் மற்றும் தன்னலமற்ற உழைப்பு கோடிக்கணக்கான கனடாவாசிகளுக்கு நன்மையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# தவறிழைத்த பல்கலைக்கழகம்: மன்னிப்பு கோரிய நிர்வாகம்

யார்க் பல்கலைக்கழகம், 2025 ஆம் ஆண்டு பட்டப் படிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தவறுதலாக மாணவர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறு தவறுதலாக தகவல் வழங்கப்பட்ட மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

அனுமதி பெற்ற மாணவர்களுக்கான வெபினார் அழைப்புக் கடிதம் தவறுதலாக பரந்த விண்ணப்பதாரர் பட்டியலுக்கு அனுப்பப்பட்டதாக பல்கலைக்கழக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது அனுமதி கடிதம் அல்ல என்றாலும், அதைப் பெற்றவர்களுக்கு குழப்பம் ஏற்பட்டிருக்கலாம் என்பதையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த தவறைத் தொடர்ந்து, ஒவ்வொரு பெறுநருக்கும் தெளிவுபடுத்தும் விளக்க மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த மின்னஞ்சலில் பிழை குறித்து விளக்கமும், குழப்பத்திற்கு நேரிடக்கூடிய பாதிப்பை ஒப்புக்கொண்டு மன்னிப்பும் தெரிவிக்கப்பட்டது.

இந்த தவறான அழைப்புகள் மொத்த விண்ணப்பதாரர்களில் அரைவாசிப்பேருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம், முதல் மின்னஞ்சலை பொருட்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், மாணவர்கள் ஏதேனும் சந்தேகங்களுக்காக தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரியும் வழங்கப்பட்டுள்ளது.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'Drug Shortages Canada' இணையதளத்தில், உயர் இரத்த அழுத்தத்தை (Hypertension) குறைக்கும் முக்கியமான மருந்தான Chlorthalidone வின் இரண்டு பிராண்டுகள் பற்றாக்குறையில் உள்ளன எனப் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த மருந்து, உடலில் உள்ள நீரின் அளவை குறைக்கும் வகையில் சிறுநீர் வெளியேற்றத்தை அதிகரித்து, ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் பயன்பாட்டில் உள்ளது.

இத்தகவல், கனடாவின் மருந்து பற்றாக்குறை கட்டுப்பாட்டு அமைப்பான Drug Shortages Canada இல் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த பற்றாக்குறைகள் 'Tier 3' பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'Tier 3' என்ற வகை என்பது நாட்டின் மருந்து விநியோகம் மற்றும் சுகாதார சேவைகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்போது மட்டுமே வழங்கப்படுகிறது.

மருத்துவர்கள் மற்றும் நோயாளிகள், சிகிச்சை மாற்றங்கள் குறித்து ஆலோசனைக்காக தங்கள் மருத்துவரை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.